**பணப் பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சிகளின் மூலம் மாற்றுத் திறன்கொண்ட மக்களுக்கு உதவியளிக்கும் செயற்திட்டம் (திரிசவிய) - 2013**

---

பணப் பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சிகளின் மூலம் மாற்றுத் திறன்கொண்ட மக்களுக்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தின் (திரிசவிய) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 30 ஆந் திகதிய ரீஎப் 013135 – எல்கே ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.06 (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சமூக சேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவரும், அமுலாக்கல் முகவருமாகும். மாற்றுத் திறன்கொண்ட மக்களின் வாழ்க்கைத் தொழிலை முன்னேற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் முயற்சியின் பங்காக இலங்கையில் ஒன்பது மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறன்கொண்ட மக்களுக்காக பணப் பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சிகளின் இலக்கே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டமானது மாற்றுத் திறன் கொண்ட காயப்பட்ட மக்களுக்காக பணப் படிகள், தொழிற் திறன் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி முன்மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள் எனும் இரு கூறுகளைக் கொண்டதாகும். மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் யூஎஸ்.டொலர் 2,590,000 ஆவதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் (ஐடீஏ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2012 நவம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட மானிய உடன்படிக்கைகயின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மானிய உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக நியாயமாக நம்பிக்கையை வைக்கமுடியும் என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற முதலாவது கணக்காண்டிற்கான செயற்திட்டத்தின் செலவுகள் ரூபா 77,214,000 ஆக இருந்ததுடன் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான செலவினப் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவு |
|---|---|
| | ரூபா |
| மாற்றுத் திறன் கொண்ட காயப்பட்ட மக்களுக்காக பணப் படிகள் | 77,214,000 |
| | 77,214,000 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக மத்திய வங்கியால் பெறப்பட்ட ரூபா 121,485,296 தொகையான மானியங்கள் ரூபா 77,214,000 தொகையான செலவினங்களையும் மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட மாற்றுத் திறன்கொண்ட நபர்களுக்கான தேசிய மன்றத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் நடவடிக்கைகளின் தன்மை வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 இன் பீஎப்/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் படி, நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 18 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியீட்டம், பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வளங்கள் | நிதியளிக்க உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்டீ மில் | ரூபா மில் | ரூபா மில் | யூ.எஸ்டீ மில் | ரூபா மில் |
| ஐடீஏ | 2.59 | 330.48 | 123.00 | 0.93 | 77.2 |
| மொத்தம் | 2.59 | 330.48 | 123.00 | 0.93 | 77.2 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாற்றுத் திறன் கொண்டவர்களுக்கான படிப்பணக் கொடுப்பனவுகள் 2013 சனவரியில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2013 ஏப்ரல் மாதமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பெறப்பட்ட ரூபா 77.99 மில்லியனில் தொகையான மானிய பெறுகைகளில், ரூபா 77.21 மில்லியன் தொகையான வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் கூறு – 01 இன் கீழ் மாற்றுத் திறன் கொண்ட வடுப்படத்தக்க மக்களுக்காக பணப் படிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 785,994 தொகையானது செலவிடப்படாத மீதியாகக் காணப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் கூறு – 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட இருந்த தொழிற் திறன் பயிற்சி மற்றும்

திறன் அபிவிருத்தி முன்மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான நடவடிக்கைகள் எவையும் மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்கப்பெற்ற தகவலின் படி, வடக்கில் ஒன்பது மாவட்டங்களில் மாற்றுத் திறன் கொண்ட 2963 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் வங்கிக் கணக்குகளினூடாக நேரடியாக ரூபா 77.21 மில்லியன் தொகையான பணப்படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மாற்றுத் திறன் கொண்ட காயப்பட்ட மக்களுக்காக செயற்திட்டத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய ஆறு மாவட்டங்களிலிருந்தான 98 நபர்களுக்கான பணத்தைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கியிருக்கவில்லை. மேலும் வங்கிக் கணக்குகளினூடாக அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 7,317,000 கூட்டுமொத்தத் தொகையான பணப் படிப்பணம் தவறான கணக்குக் குறியீட்டு இலக்கங்கள், தவறான வங்கிக் கணக்குகளின் பயன்பாடு போன்ற பல்வேறு காரணங்களால் பின்னர் திருப்பப்பட்டிருந்தன.